விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் கீழ்மாம்பட்டுரெட்டனை சாலையில் உள்ள ஈச்சூர் தரைப்பாளத்தை 3.67கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய உயர்மட்ட மேம்பாலமாக கட்டுவதற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பணிகளை தொடங்கி வைத்தார். உடன்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா,ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், ஒன்றிய செயலாளர் மொடையூர் துரை,நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் தியாகராஜன், உதவி பொறியாளர்கள் பாஸ்கர், ராமு, சேகர்,ஒன்றிய கவுன்சிலர்கள் கம்சலா மாரிமுத்து, ரேணுகா வேலாயுதம், விஜயா கண்ணன்,கலைவாணி கிருஷ்ணமூர்த்தி,பத்மநாபன்,ஊராட்சி மன்ற தலைவர்கள் ராஜகோபால், உள்ளனர்.

முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் நிகழ்ச்சி ஏற்பாடு! கலைஞர் தமிழ்ச் சங்கத்தின் சார்பில்

271 தமிழாசிரியர்களுக்கு கலைஞர் விருது வழங்கும் விழா!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - தங்கம் தென்னரசு பங்கேற்பு!

சிவகங்கை, டிச. 21-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் முன்னாள் அமைச்சர் மூ.தென்னவன் நிறுவனராக கடந்த 25ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வருகிறது. கலைஞர் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் டிச.27ஆம் தேதி சனிக் கிழமை மாலை 5 மணி அளவில் அபூர்வா மஹாலில் 271 தமிழ் ஆசிரியர்களுக்கு கலைஞர் விருது வழங்கும் விழா நடைபெறுகிறது. மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர் கலைஞர் தமிழ் சங்க நிறுவனர் மு.தென்னவன்,தொழிலதிபர் பி. எல். படிக்காசு ,மேயர் எஸ்.முத்துதுரை ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. கலைஞர் தமிழ் சங்க செயலாளர் பொறியாளர் தீ. செந்தில்குமார் வரவேற்று பேசுகிறார்.

மாநில செய்தி தொடர்பு அணி துணைத்தலைவர் மருது அழகுராஜ் துவக்க உரையாற்றுகிறார் .

விழாவில் 271 தமிழ் ஆசிரியர்களுக்கு கலைஞர் விருதினை நிதி அமைச்சர் மண்டல பொறுப்பாளர் தங்கம் தென்னரசு சிறப்புரையாற்றுகிறார். இந்த நிகழ்ச்சியில் எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசிரவிக்குமார், எஸ். மாங்குடி ,முன்னாள் எம்.எல்.ஏ சுப.துரை ராஜ் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள். துணை மேயர் காரைக்குடி மாநகரச் செயலாளர் நா. குணசேகரன் நன்றி கூறுகிறார் .

நிகழ்ச்சி ஏற்பாடுகளை கலைஞர் தமிழ்ச்சங்க நிறுவனர் முன்னாள் அமைச்சர் மூ. தென்னவன் செயலாளர் பொறியாளர் தி. செந்தில்குமார் மற்றும் நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

மேல்மலையனூர் ஒன்றியம் – தேவனூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் –

147 மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

செஞ்சி, டிச.21-

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் தேவனூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் பதினோராம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். வட்டார கல்வி குழுத் தலைவர் நெடுஞ்செழியன் முன்னிலை வகித்தார். பள்ளி தலைமை ஆசிரியர் அண்ணாமலை அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்து கொண்டு பதினோராம் வகுப்பு படிக்கும் 147 மாணவ மாணவிகளுக்குத தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு .க . ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து கல்வித்துறைக்கு பல்வேறு திட்டங்களை செயல் படுத்தி வருகிறார்.

அந்த வகையில் இந்தியாவில் உள்ள 28 மாநிலங்களில் தமிழ்நாடு முதன்மை பெறுவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின்கடுமையான உழைப்பாலும், அறிவுபூர்வமான செயல் திட்டங்களால் இன்றைக்கு தமிழ்நாடு தலை நிமிர்ந்து நின்று எல்லாத் துறைகளிலும் முதன்மை இடம் பெற்று வருவதாக முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பெருமிதம் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் நாராயண மூர்த்தி , ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன்,ஒன்றிய கவுன்சிலர்கள் ரவிச்சந்திரன், சக்தி,ஊராட்சி மன்ற தலைவர் சாந்தி சக்திவேல்,பள்ளி மேலாண்மை குழு தலைவர் மகேஸ்வரி ஆறுமுகம், ஒன்றிய நிர்வாகிகள் மன்ன ஏழுமலை, சரவணன்,எஸ்.பி. சம்பத், செந்தில்குமார், ஜி.பி.ஸ். முருகன்,தோப்பு சம்பத்,ஆறுமுகம், ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் திலகவதி, வளத்தி ஊராட்சி மன்ற தலைவர் விஜயலட்சுமி ஜெயக்குமார்,பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் .பள்ளி உதவி தலைமை ஆசிரியர் இளங்கோவன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

கடலூர் மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மருந்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசின் இலவச மிதிவண்டி வழங்கும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன் கலந்து கொண்டு, ஏழு அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 855 மாணவ – மாணவிகளுக்கு மிதிவண்டிகளை வழங்கினார் மாவட்ட கல்வி அலுவலர் துரைப்பாண்டியன் முன்னிலை வகித்தார். இதில் பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர்கள் உள்ளிட்ட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

கடலூர் மேற்கு மாவட்டம் பண்ருட்டி சட்டமன்ற தொகுதி அண்ணாகிராமம் ஒன்றியம் ஒறையூர் அரசூர் மேல்நிலைப் பள்ளியில், மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வேளாண்மை ஆத்மா குழு தலைவர், ஒன்றிய கழக செயலாளர் அண்ணன் வி.கே. வெங்கட்ராமன் வழங்கினார். தலைமை ஆசிரியர் வரப்பிரசாத மேரி,மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் கே. ராமு, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் நடராஜன், கிளை செயலாளர்கள் வெங்கடேசன், சாம்பசிவம், சாமிதுரை, செல்வம், பழனிவேல் ONP சக்கரபாணி , அருண் BDA, புவனேஷ், ஒறையூர் ராஜ்குமார் மற்றும் ஆசிரியர் பெருமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கடலூர்மாவட்டம், விருத்தாசலம்சட்டமன்றத்தொகுதி, நல்லூர்வடக்குஒன்றியம், மேமாத்தூர்கிராமத்தில்உள்ளமணிமுத்தாற்றின்குறுக்கே (எஸ். எஸ்.ஏ) நிதியிலிருந்து 12 கோடியே 61 லட்சம்மதிப்பில் 195மீட்டர்நீளத்திற்குபுதியஉயர்மட்டமேம்பாலம்கட்டதொழிலாளர்நலன்மற்றும்திறன்மேம்பாட்டுதுறைஅமைச்சர்சிவெ.கணேசன்மற்றும்விருத்தாசலம்சட்டமன்றஉறுப்பினர்ராதாகிருஷ்ணன்ஆகியோர்அடிக்கல்நாட்டிபணியைதுவங்கி வைத்தனர்.

நெல்லை மேற்கு மாவட்டம் அம்பை அடையக்கருங்குளம் ஊராட்சியில்

அ.தி.மு.க.வினர் 20 பேர் கழகத்தில் இணைந்தனர்

மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் முன்னிலை!

நெல்லை.டிச.21-

நெல்லை மேற்கு மாவட்டம் அம்பாசமுத்திரம் தொகுதி அடைய கருங்குளம் ஊராட்சி அ.தி.மு.க அம்மா பேரவை செயலாளர் சக்திவேல் உட்பட 20 பேர்கள் அ.தி.மு.கவிலிருந்து விலகி நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின்தலைமையை ஏற்று.கழக அரசின் பல்வேறு சாதனைகளை தெரிந்து கொண்டு நெல்லை மேற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன். முன்னிலையில் நெல்லை மேற்கு மாவட்டம் அம்பாசமுத்திரம் தொகுதி அடையகருங்குளம் ஊராட்சி அ.தி.மு.க.அம்மா பேரவை செயலாளர் சக்திவேல் தலைமையில் அ.தி.மு.க.வினர் 20 பேர்கள் அக்கட்சியிலிருந்து விலகி கழகத்தில் தங்களை இணைந்துகொண்டனர்.

நிகழ்ச்சியில் அம்பாசமுத்திரம் மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் ஜெகன்.மாவட்ட துணை செயலாளர் மாஞ்சோலை மைக்கேல், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அணி அமைப்பாளர் நெடுஞ்செழியன், மாவட்ட கவுன்சிலர் அருந்தவசு பாண்டியன், ஒன்றிய துணை செயலாளர் செல்வம், ஒன்றிய கவுன்சிலர் தங்கராஜா.சிவந்திபுரம் நாராயணன்.கிளை செயலாளர்கள் சீதாராமன் மற்றும் ராஜன்.கிருபாகரன்.பிரம்மநாயகம் என்றபிரபு.ராஜன்.சாம்பசிவம்.சென்டிகிஸ் முருகன், கந்தகுமார்.புலவன்பட்டி சுரேஷ், சகாயராஜ பிரபாகரன் மற்றும் கழகத்தினர் உடன் இருந்தனர்.

வேலூர் மாநகர தி.மு.க. அலுவலகத்தில் பேராசிரியர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது படத்திற்கு மாநகர செயலாளர் ப. கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநில கொள்கை பரப்புதுணைசெயலாளர்கள் முன்னாள்அமைச்சர்வி.எஸ்.விஜய், கதிரேசன், பகுதிசெயலாளர்கள்ஆர்.இ.பி.சசிகுமார்,சுந்தரவிஜி,தி.அ.முனவர்பாஷா,முருக பெருமாள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாலாஜி,அயலக அணி துபாய் சீனு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.